# வழிநடை சரணங்கள் சபரிமலை பக்தர்களுக்காக

ஸ்வாமியே ஐயப்போ - ஐயப்போ ஸ்வாமியே

பள்ளிகெட்டுச் சபரிமலைக்கு - சபரிமலைக்கு பள்ளிக்கெட்டு

கன்னிக்கெட்டுச் சபரிமலைக்கு - சபரிமலைக்குக் கன்னிக்கெட்டு

நெய்யபிஷேகம் சுவாமிக்கு - சுவாமிக்கு நெய்யபிஷேகம்

கற்பூரதீபம் சுவாமிக்கு - சுவாமிக்கு கற்பூரதீபம்

வெல்ல நெய்வேத்தியம் சுவாமிக்கு - சுவாமிக்கு வெல்ல நெய்வேத்தியம்

அவிலும் மலரும் சுவாமிக்கு - சுவாமிக்கு அவிலும் மலரும்

பாலபிஷேகம் சுவாமிக்கு - சுவாமிக்கு பாலபிஷேகம்

தேனபிஷேகம் சுவாமிக்கு - சுவாமிக்கு தேனபிஷேகம்

புஷ்பாபிஷேகம் சுவாமிக்கு - சுவாமிக்கு புஷ்பாபிஷேகம்

முத்திரைத் தேங்காய் சுவாமிக்கு - சுவாமிக்கு முத்திரைத் தேங்காய்

பகவானே பகவதியே - பகவதியே பகவானே

தேவனே தேவியே - தேவியே தேவனே

ஈஸ்வரனே ஈஸ்வரியே - ஈஸ்வரியே ஈஸ்வரனே

கணபதியே சரஸ்வதியே - சரஸ்வதியே கணபதியே

சாமி சரணம் அய்யப்ப சரணம் - ஐயப்ப சரணம் சாமி சரணம்

பகவான் சரணம் பகவதி சரணம் - பகவதி சரணம் பகவான் சரணம்

தேவன் சரணம் தேவி சரணம் - தேவி சரணம் தேவன் சரணம்

ஈஸ்வரன் சரணம் ஈஸ்வரி சரணம் - ஈஸ்வரி சரணம் ஈஸ்வரன் சரணம்

சுவாமி பாதம் ஐயப்ப பாதம் - ஐயப்ப பாதம் சுவாமி பாதம்

பகவான் பாதம் பகவதி பாதம் - பகவதி பாதம் பகவான் பாதம்

பாத பலம் தா தேஹ பலம் தா - தேஹ பலம் தா பாத பலம் தா

DIVINEINFOGURU.COM

மனோபலம்தா ஆத்மபலம்தா - ஆத்மபலம்தா மனோபலம்தா

கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை - காலுக்கு மெத்தை கல்லும் முள்ளும்

குண்டும் குழியும் கண்ணுக்கு வெளிச்சம் - கண்ணுக்கு வெளிச்சம் குண்டும் குழியும்

அக்கம் பக்கம் பார்க்காதே - கீழே மேலே பார்க்காதே

ஸ்வாமியே ஐயப்பா - ஐயப்பா ஸ்வாமியே

ஏத்திவிடப்பா தூக்கிவிடப்பா - தூக்கிவிடப்பா ஏத்திவிடப்பா

ஏந்திவிடப்பா தள்ளிவிடப்பா - தள்ளிவிடப்பா ஏந்திவிடப்பா

சத்குருநாதா ஐயப்பா - ஐயப்பா சத்குருநாதா

சாந்த ஸ்வரூபா ஐயப்பா - ஐயப்பா சாந்த ஸ்வரூபா

கலியுக வரதா ஐயப்பா - ஐயப்பா கலியுக வரதா

கண்கண்ட தெய்வமே ஐயப்பா - ஐயப்பா கண்கண்ட தெய்வமே

காப்பாடப்பா ஐயப்பா - ஐயப்பா காப்பாடப்பா

கானகவாசா மணிகண்டா - கானனவாசா மணிகண்டா

எப்பப்போறோம் - இப்பப்போறோம்

யாரைக்காண - சாமியைக்காண

சாமியைக்கண்டால் - மோட்சம் கிட்டும்

வில்லாளிவீருடு - வீரமணி கண்டுடு

ராஜாதி ராஜனே - ராஜமகராஜனே

ராஜாதி ராஜுலு - ராஜமகராஜுடு

DIVINEINFOGURU.COM

உத்திரத்தில் உதித்தவன் - ஐயப்பன்

ஊமைக்கருள் புரிந்தவன் - ஐயப்பன்

ஊழ்வினை அழிப்பவன் - ஐயப்பன்

உலகாளும் காவலன் - ஐயப்பன்

ஸ்வாமியே ஐயப்பா - ஐயப்பா ஸ்வாமியே.

ஓம் ஸ்வாமியே சரணம் ஐயப்பா!!!

Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/sri-ayyappan-vazhi-nadai-saranam-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## பந்தளபாலா ஐயப்பா

பந்தளபாலா ஐயப்பா

பரமதயாளா ஐயப்பா

பரமபவித்ரனே ஐயப்பா

பக்தருக்கருள்வாய் ஐயப்பா!

நித்ய ப்ரம்மசாரியே நின் சரங்குத்தி ஆலில்

எத்தனை கன்னிச்சரமோ ஸ்வாமியே ஐயப்பா!

ஞான வடிவே ஞானமூர்த்தி சுதனே

ஞானஒளி அருள்வாய் ஸ்வாமியே ஐயப்பா!.

பம்பையில் பிறந்து பந்தளத்தில் வளர்ந்து

பன்னிரெண்டு காலமும் ஸ்வாமியே ஐயப்பா!

சத்திய சொரூபனே சபரிகிரி வாசனே

சாம்பசிவன் மைந்தனே ஸ்வாமியே ஐயப்பா!

கண்ணனின் மைந்தனே கரிமலை வாசனே

காத்து ரட்சிப்பவனே ஐயனே ஐயப்பா!

சின்மய ரூபனே சிக்கல் தீர்ப்பவனே

சித்தர்கள் தினம் போற்றும்

செல்வனே ஐயப்பா!

DIVINEINFOGURU.COM

வல்லமை தருவோனே வைத்தீஸ்வரன் மகனே

வற்றா அமுத ஊற்றே

வையகத்து ஐயப்பா!

கட்டிக்கரும்பே தேனே!! கண்கண்ட தெய்வமே!!

கருணை புரிவாயே கடவுளே ஐயப்பா!!

Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/

DIVINEINFOGURU.COM

## ஐயப்பனின் மலைக்குப் போக மாலை போட்டுக்கோ

ஐயப்பனின் மலைக்குப் போக மாலை போட்டுக்கோ

வழிமுறைகள் சொல்லித்தாரேன் நீயும் கேட்டுக்கோ சாமி (ஐயப்பனின் )

பலவருஷம் மலைக்கு போன பழுத்த சாமியை

பார்த்து தேடி அவர்பாதம் நீ பணியனும்

குருவாக அவரை நெஞ்சில் ஏத்துக் கொள்ளனும்

துளசிமாலை அவர் கையால் நீ வாங்கணும்

காலையிலே நீராடி நீரணியணும்

கன்னிமூல கணபதியை நீ நினைக்கணும்

மாலையை குரு கையாலே நீ அணியணும்

மனதில் ஐயன் உருவகத்தை நீ தாங்கணும்

(ஐயப்பனின்)

ஆறுவாரம் கடுமையாக நோன்பிருக்கணும்

ஆடையிலே கருப்பு நீலம் நிறமிருக்கணும்

ஆடையிலே காவி நீலம் நிறமிருக்கணும்

காலையிலும் மாலையிலும் கோவில் போகணும் (ஐயப்பனின்)

கட்டாயும் ஆசைகளை அடக்கி வைக்கணும்

அனுதினமும் பஜனைகளில் கலந்து கொள்ளணும்

அன்னதானம் முடிஞ்சவரை நீ செய்யணும்

இருமுடியை உந்தலையில் நீ சுமக்கணும்

இறுதிவரை கால; நடையாய் மலை கடக்கணும் (ஐயப்பனின்)

DIVINEINFOGURU.COM

பம்பையிலே நீராடி விளக்கேத்தணும்

ஐயன் நாமம் உள்ளத்திலே குடியேத்தணும்

பதினெட்டுப் படி ஏறி அவனைப் பாக்கணும்

பந்த பாச சுமைகளெல்லாம் நீ போக்கணும்

இருமுடியில் உள்ள நெய்யை நீ படைக்கணும்

திருப்படியில் தேங்காயை நீ உடைக்கணும்

மகரஜோதி தரிசனத்தில் மனம் நிறையணும்

மங்கலங்கள் நாளும் நாளும் பொங்கி வழியணும் (ஐயப்பனின்)

Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/ayyappan-malai-ku-poga-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## துளசிமணி மாலை அணிந்து சபரிமலை சென்றிடுவோம்

துளசிமணி மாலை அணிந்து சபரிமலை சென்றிடுவோம்

தூயவனாம் ஐயப்பனின் தரிசனமே கண்டிடுவோம் (துளசிமணி மாலை)

பனிமலையின் உச்சியிலே பதினெட்டாம் படிதனிலே

பரிவுடன் அமைந்திருக்கும் சாஸ்தாவே சரணம் என்று (துளசிமணி மாலை)

சதாசிவன் மகனின் பதாம்புஜம் பணிந்து

சதா அவன் நினைவில் மனமகிழ்ந்து

கணாதிபன் அந்த விநாயகன் தம்பி

குணகரனை அனுதினம் நினைந்து

இணைபடியே நம்பி வந்து ஐயன் இதயத்திலே நாம் கலந்து

பணிந்து மகிழ்ந்து கனிந்து விரதமிருந்து இருமுடி சுமந்து

குருவடிவானவன் கருணையை அறிந்து

திருவருள் நிறைந்திடும் சன்னதி வந்திடவே (துளசிமணி மாலை)

பவள மணித் திருமார்பினிலே பந்தளராஜனின் ஆபரணம்

அவனியெல்லாம் போற்றிடவே அந்த மணிகண்ட குமரனின் அலங்காரம்

பலவினைகள் நீங்கிடவே பகவான் நாமம் பாடிடுவோம்

நம் கவலையெல்லாம் மறந்திடவே கருணை மழையில் கூடிடுவோம் (துளசிமணி மாலை)

Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/thulasimani-maalai-aninthu-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## ஸ்வாமி மாரே ஸ்வாமி மாரே ஒண்ணாக் கூடுங்கோ

ஸ்வாமி மாரே ஸ்வாமி மாரே ஒண்ணாக்கூடுங்கோ

சரணம் சரணம் சரணம் என்று சொல்லிப் பாடுங்கோ – நீங்க

சரணம் சரணம் சரணம் என்று சொல்லிப் பாடுங்கோ

ஆனந்தமே ஐயன் தரிசனமே அதைத்

கண்ணாரக் கண்டு விட்டாலோ புண்ணியமே (ஸ்வாமி மாரே)

குருசாமி திருவடியை வணங்கிட வேண்டும்

தரிசனம் கிடைக்க வரம் கேட்க வேண்டும்

எரிமேலி பேட்டைதுள்ளி ஆட்டம் போடணும் அந்தப்

பெருமானின் பேரைச் சொல்லி இன்பம் சேர்க்கணும் (ஸ்வாமி மாரே)

கங்கா நதி போன்று பம்பா நதியில்

மங்கள நீராடி மகிழ்ந்திட வேணும்

குங்குமம் சந்தனம் திரு நீறணிந்து

பம்பையில் பாட்டுப் பாடி விளக்கேத்தணும் (ஸ்வாமி மாரே)

Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/swamimare-swamimare-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

# கன்னிமலை பொன்மலை புண்யமலை சபரிமலை

ஐயனே…. ஐ…. சரணம் ஐயப்பா

ஐயனே…. ஐ…. சரணம் ஐயப்பா

மாலையும் மார்பிலிட்டு நோன்புகள் நோற்று நாங்கள்

மாமலைகள் ண்டிவருவோம் ஐயனைக் காண்போம்

கன்னிமலை பொன்மலை புண்யமலை சபரிமலை

கன்னிமலை பொன்மலை புண்யமலை சபரிமலை

மணிகண்டன் வாழும் மலை – பக்தர்

பல நாடு விட்டிங்கே பல கோடியாய் சேர்ந்து

சரணம் முழங்கும் மலை – சுவாமி சரணம் முழங்கும்மலை

என் ஐயா பொன் ஐயா என் ஐயா ஐயப்பனே

சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னி)

கௌரீசன் தன்மகனாம்

கலிகால தெய்வமவன்

பம்பா நதிக்கரையில் பிறந்தானே ஐயன் ஐயன்

வேட்டையாடும் மன்னனவன் காட்டினிலே சென்ற நேரம்

கண்டெடுத்து ஐயனை வளர்த்தானே

என் ஐயா பொன்ஜயா என் ஐயா ஐயப்பனே

சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னி)

வில்லாளி வீரனாகி வீரமணிகண்டனாகி

புலிவாகனனாகி சுவாமி மகிஷிமர்த்தனனாகி

DIVINEINFOGURU.COM

ஏழுமலை தாண்டி ஐயன் சபரிமலை மேலமர்ந்தான்

நாம் அவனை போற்றி நலம் பெறுவோம்

என் ஐயா பொன்ஐயா என் ஐயா ஐயப்பனே

சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னிமலை)

கன்னிகட்டு நிறைவு செய்தவர்

கரிமலை நீலிமலை கடந்து வருபவர்

பதினெட்டாம் படி ஏறி வருபவர்

சரணம் முழங்கி ஆடிப்பாடி வருபவர்

மோட்சம் பெற முக்தி பெற பாட்டுப்பாடி

துள்ளி ஆடும் சாமி பக்தருக்குள் புரிவான்

என்ஐயா பொன்ஐயா என்ஐயா ஐயப்பனே

சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னிமலை)

Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/kannimalai-ponnu-malai-punyamalai-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## சபரிமலைக்காடு அது சாஸ்தாவின் வீடு

சபரிமலைக்காடு அது சாஸ்தாவின் வீடு

இருமுடிக்கட்டி நடைபோடு எந்நாளும் அவன் துணை தேடு

ஆசைகளெல்லாம் நிறைவேறும் – நம்

காரியமெல்லாம் கைகூடும் (சபரிமலைக்காடு )

மலைமேல் இருக்கின்றான் மகர தீபத்தில் தெரிகின்றான் – நீ

சரணமென்றே சொல்லு அவன் சன்னதி நாடிச் செல்லு

ஆசைகளெல்லாம் நிறைவேறும் – நம்

காரியமெல்லாம் கைகூடும்

அன்பு காணிக்கை பெறுகின்றான் அபிஷேகக காட்சி தருகின்றான்

கையெடுத்து நீ கும்பிடப்பா காலமெல்லாம் நம்பிடப்பா

புண்ணிய மெல்லாம் தேடிவரும் பகழெல்லாமே ஓடிவரும் (சபரிமலைக்காடு )

சாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (4 முறை)

Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/sabarimala-kadu-athu-sasthavin-veedu-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## சொன்னால் இனிக்குது சுகமாய் இருக்குது

சொன்னால் இனிக்குது

சுகமாய் இருக்குது

பொன்னாய் மணியாய்

உன் முகம் ஜொலிக்குது

ஹரிஹர புத்திர அவதாரமே

அதிகாலை கேட்கின்ற பூபாளமே

அணுவுக்குள் அணுவான ஆதாரமே

நான் அன்றாடம் படிக்கின்ற தேவாரமே.

வேதத்தின் விதையாக விழுந்தவனே

வீரத்தின் கணையாக பிறந்தவனே

பேதத்தை போராடி அழித்தவனே

ஞான வேதாந்த பொருளாக திகழ்பவனே.

வில்லுடன் அம்புடன் வேங்கைப் புலியுடன்

போர்க்களம் புகுந்தவனே

சொல்லி முடித்திடும் முன் வரும் பகையை

கிள்ளி எறிபவனே

அள்ளி எடுத்து அருள் தருபவனே

அன்பே வடிவாய் இருப்பவனே

Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/sonnal-inikkuthu-sugamaai-irukkuthu-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## சபரிமலையில் வண்ண சந்திரோதயம்

சபரிமலையில் வண்ண சந்திரோதயம் தர்ம
சாஸ்தாவின் சந்நிதியில் அபிஷேகம்

கோடிக்கண் தேடிவரும் ஐயப்பனை…நாமும்
கும்பிட்டுப் பாடுகின்றோம் என்னப்பனை (சபரி)

பாலெனச் சொல்லுவதும் உடலாகும் – அதில்
தயிரெனக் கண்டதெங்கள் மனமாகும்
வெண்ணெய் திரண்டதுந்தன் அருளாகும்…. இந்த
நெய் அபிஷேகம் எங்கள் அன்பாகும்
ஏழுகடல் உனதாட்சியிலே வரும் ஐயப்பா…இந்த
ஏழுலகம் உந்தன் காட்சியிலே வரும்
ஐயப்பா நீதான் மெய்யப்பா ஐயப்பா நீதான் மெய்யப்பா (சபரி)

வாசமுடைய பன்னீர் அபிஷேகம்… எங்கள்
மனதில் எழுந்த அன்பால் அபிஷேகம் – அதில்
இனிய பஞ்சாமிர்தத்தின் அபிஷேகம்
இன்பத்தைக் கூட்டுதய்யா உன் தேகம்
ஏழுகடல் உனதாட்சியிலே வரும் ஐயப்பா – இந்த
ஏழுலகம் உந்தன் காட்சியிலே வரும் ஐயப்பா ஐயப்பா
ஐயப்பா நீதான் மெய்யப்பா ஐயப்பா நீதான் மெய்யப்பா (சபரி)
உள்ளத்தின் வெண்மைதன்னைக் கையிலெடுத்து – அதில்
உன் பெயரைக் குழைத்து நெற்றியிலிட்டு
உருகும் விபூதியினால் அபிஷேகம்…ஹரி
ஓம்மென்று சந்தனத்தில் அபிஷேகம்

DIVINEINFOGURU.COM

ஏழுகடல் உனதாட்சியிலே வரும் ஐயப்பா – இந்த

ஏழுலகம் உந்தன் காட்சியிலே வரும் ஐயப்பா

ஐயப்பா நீதான் மெய்யப்பா ஐயப்பா நீதான் மெய்யப்பா (சபரி)

Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/sabarimalayil-vanna-chandrodayam-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## **கார்த்திகை அதிகாலை நீராடி**

கார்த்திகை அதிகாலை நீராடி கடவுள் உன்திரு நாமம் பேர்பாடி

கண்களை மூடி உன் போவிலே இன்னிசை பாடுமென் நாவினிலே

ஹரிகர மைந்தா உன் சுப்ரபாதம் பாடும்

வரமொன்று தருவாயோ ஐயப்பனே (கார்த்திகை அதிகாலை)

ஹரிகர மைந்தா உன் சுப்ரபாதம் பாடும்

வரமொன்று தருவாயோ ஐயப்பனே (கார்த்திகை அதிகாலை)

காலைக் கதிரோனம் கரங்களை நீட்டிய

வேளையிலுன் தெய்வ சன்னதியில்

ஒருராக மாலையை திருவடி மீதினில்

படைத்திடும் வரம் வேண்டும் ஐயப்பனே (கார்த்திகை அதிகாலை)

இருமுடி தனை ஏந்தி நடந்திடும் பாதையில்

சிறுகல் போல் நானும் பிறப்பேனோ

வரும் அடியார் உனை வணங்கிடும் வேளையில்

எரிந்திடும் கற்பூரம் ஆவேனோ (கார்த்திகை அதிகாலை)

DIVINEINFOGURU.COM

Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/karthigai-athikalai-neeradi-kadavul-lord-ayyappa-songs/

## வழிகாட்டும் குல தெய்வம் நீ அல்லவோ

வழிகாட்டும் குல தெய்வம் நீ அல்லவோ

வழிகாட்டும் குல தெய்வம் நீ அல்லவோ

சபரி மலைவாழும் மணிகண்டனே ....

மாநிலம் மீதினில்

வழிகாட்டும் குல தெய்வம் நீ அல்லவோ

சபரி மலைவாழும் மணிகண்டனே ....

மாநிலம் மீதினில்

வழிகாட்டும் குல தெய்வம் நீ அல்லவோ

எழில்மேவும் மலைவாழும் எருமேலி ஈசனே .... யே……..

எழில்மேவும் மலைவாழும் எருமேலி ஈசனே

என்னாளும் மறவேனே எனை ஆளும் பெருமானே

என்னாளும் மறவேனே எனை ஆளும் பெருமானே

வழிகாட்டும் குல தெய்வம் நீ அல்லவோ

சபரி மலைவாழும் மணிகண்டனே ....

மாநிலம் மீதினில்

வழிகாட்டும் குல தெய்வம் நீ அல்லவோ

அன்பாலே எமை ஆழும் எம் தந்தை தாயாகி

அறிவாகி உயிராகி ஆதாரப் பொருளாகி

அன்பாலே எமை ஆழும் எம் தந்தை தாயாகி

அறிவாகி உயிராகி ஆதாரப் பொருளாகி

DIVINEINFOGURU.COM

சன்மார்க்க நெறிகாட்டும் மெய்ஞான குருவாகி

சன்மார்க்க நெறிகாட்டும் மெய்ஞான குருவாகி

தயங்காது வந்தென்றும் தயையென்னும் ஒளியாகி

தயங்காது வந்தென்றும் தயையென்னும் ஒளியாகி

வழிகாட்டும் குல தெய்வம் நீ அல்லவோ

சபரி மலைவாழும் மணிகண்டனே ….

மாநிலம் மீதினில்

வழிகாட்டும் குல தெய்வம் நீ அல்லவோ ….. வோ…… ஓ.. ஓ…ஓஓ. ஒ

Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/vazhikattum-kula-deivam-nee-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## இதயம் என்றும் உனக்காக ஐயப்பா உன் பதமலரே துணை

இதயம் என்றும் உனக்காக ஐயப்பா ....

உன் பதமலரே துணை எனக்கு ஐயப்பா

நிதமும் உந்தன் நாமம் சொல்வேன் ஐயப்பா

உனை நினைந்து நினைந்து உருகிட வேண்டும் ஐயப்பா

இதயம் என்றும் உனக்காக ஐயப்பா ....

உன் பதமலரே துணை எனக்கு ஐயப்பா

கேரள பாண்டிய இராஜகுமாரா சரணம் ஐயப்பா .... ஐயப்பா

நாரண சங்கரன் மகிழும் செல்வா சரணம் ஐயப்பா .. ...ஐயப்பா

ஆரதமுதம் நீ பேரழகன் நீ

ஆரியங்காவில் வாழ்பவனும் நீ

இதயம் என்றும் உனக்காக ஐயப்பா ....

உன் பதமலரே துணை எனக்கு ஐயப்பா

அபயம் தந்திட சபரிமலை உண்டு ஐயப்பா

ஆறுதல் கூறிட உன் அருள் உண்டு ஐயப்பா

வேதமும் நாடும் வினைகளும் ஓடும்

DIVINEINFOGURU.COM

எங்கள் நாவும் பாடும் ஞானமும் கூடும்

இதயம் என்றும் உனக்காக ஐயப்பா ....

உன் பதமலரே துணை எனக்கு ஐயப்பா

பண்ணமுதம் தந்தவனே சரணம் ஐயப்பா .... ஐயப்பா

கண்ணழகு கொண்டவனே சரணம் ஐயப்பா .... ஐயப்பா

விண்ணவரின் கண்மணியே சரணம் ஐயப்பா

எண்ணமதில் வந்திடுவாய் சரணம் ஐயப்பா

இதயம் என்றும் உனக்காக ஐயப்பா ....

உன் பதமலரே துணை எனக்கு ஐயப்பா ...

ஹரிஹர சுதனே ஐயப்பா சாமியே சரணம் ஐயப்பா

ஹரிஹர சுதனே ஐயப்பா சாமியே சரணம் ஐயப்பா

ஹரிஹர சுதனே ஐயப்பா சாமியே சரணம் ஐயப்பா

**Read More @** https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/idhayam-entrum-unakkaka-ayyappa-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## மார்கழி மாதம் ஊர்வலம் போகும் மக்கள் கோடி ஐயப்பா

மார்கழி மாதம் ஊர்வலம் போகும் மக்கள் கோடி ஐயப்பா ....... ஆ…..

மரகத கண்டி சந்தணம் தோன்றும் மார்புகள் கோடி ஐயப்பா ...ஆ…..

மார்கழி மாதம் ஊர்வலம் போகும் மக்கள் கோடி ஐயப்பா ....... ஆ…..

மரகத கண்டி சந்தணம் தோன்றும் மார்புகள் கோடி ஐயப்பா ...ஆ…..

சரணம் ஐயப்ப சரணம் சரணம் சாமி சரணம்

சரணம் ஐயப்ப சரணம் சரணம் சாமி சரணம்

கருநிற ஆடையும் புனித வாழ்க்கையும் கொண்டவர் கோடி ஐயப்பா

கருநிற ஆடையும் புனித வாழ்க்கையும் கொண்டவர் கோடி ஐயப்பா

காவி உடையும் கழுத்தில் மணியும் ..

காவி உடையும் கழுத்தில் மணியும்

அணிந்தவர் கோடி ஐயப்பா…

அணிந்தவர் கோடி ஐயப்பா

சரணம் ஐயப்ப சரணம் சரணம் சாமி சரணம்

சரணம் ஐயப்ப சரணம் சரணம் சாமி சரணம்

இருமுடி தாங்கி கரிமலை ஏறும் கால்கள் கோடி ஐயப்பா

இருமுடி தாங்கி கரிமலை ஏறும் கால்கள் கோடி ஐயப்பா

பம்பையில் குளித்து பதினெட்டாம் படி ஏறுபவர் கோடி ஐயப்பா…….

ஏறுபவர் கோடி ஐயப்பா

சரணம் ஐயப்ப சரணம் சரணம் சாமி சரணம்

சரணம் ஐயப்ப சரணம் சரணம் சாமி சரணம்

DIVINEINFOGURU.COM

பார்வைக்கு இனிய மகர விளக்கை பார்த்தவர் கோடி ஐயப்பா

கோடி கோடி சரணங்கள் சொல்லும்

கோடி கோடி சரணங்கள் சொல்லும் பக்தர்கள் கோடி ஐயப்பா….

பக்தர்கள் கோடி ஐயப்பா

சரணம் ஐயப்ப சரணம் சரணம் சாமி சரணம்

சரணம் ஐயப்ப சரணம் சரணம் சாமி சரணம்

மார்கழி மாதம் ஊர்வலம் போகும் மக்கள் கோடி ஐயப்பா ……. ஆ….

மரகத கண்டி சந்தணம் தோன்றும் மார்புகள் கோடி ஐயப்பா …ஆ….

சரணம் ஐயப்ப சரணம் சரணம் சாமி சரணம்

சரணம் ஐயப்ப சரணம் சரணம் சாமி சரணம்

**Read More @** https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/margazhi-madham-oorvalam-pogum-makkal-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## தள்ளாடி தள்ளாடி நடை நடந்து நாங்க சபரிமலை

தள்ளாடி தள்ளாடி நடை நடந்து

நாங்க சபரிமலை நோக்கி வந்தோமய்யா

கார்த்திகை நல்ல நாளில் மாலையும் போட்டுகிட்டு

காலையிலும் மாலையிலும் சரணங்கள் சொல்லிகிட்டு

சரணங்கள் சொல்லிக்கொண்டு வந்தோமய்யா

நாங்க சபரிமலை நோக்கி வந்தோமய்யா

சாமி… (தள்ளாடி தள்ளாடி)

இருமுடிய கட்டிக்கிட்டு இன்பமாகப் பாடிக்கிட்டு

சாமி.. இருமுடிய கட்டிக்கிட்டு இன்பமாகப் பாடிக்கிட்டு

ஈசன் மகனே உந்தன் இருப்பிடத்த நோக்கிக்கிட்டு (தள்ளாடி தள்ளாடி)

பேட்டைகளும் துள்ளிவிட்டு வேஷங்களும் போட்டுக்கிட்டு

வேடிக்கையாய் நாங்களும் ஆட்டங்களும் ஆடிக்கிட்டு

சாமி திம்தக்க தோம் தோம் ஐயப்ப திம்தக்க தோம் தோம்

சாமி திம்தக்க தோம் தோம் ஐயப்ப திம்தக்க தோம் தோம்

பேட்டைகளும் துள்ளிவிட்டு வேஷங்களும் போட்டுக்கிட்டு வேடிக்கையாய்

நாங்களும் ஆட்டங்களும் ஆடிக்கிட்டு (தள்ளாடி தள்ளாடி)

காணாத காட்சியெல்லாம் கண்ணார கண்டுகிட்டு

காடுமலைகளெல்லாம் கால் நடையா தாண்டிகிட்டு

காணாத காட்சியெல்லாம் கண்ணார கண்டுகிட்டு

DIVINEINFOGURU.COM

காடுமலைகளெல்லாம் கால் நடையா தாண்டிகிட்டு

பக்தரெல்லாம் கூடி நின்று

பஜனைகளெல்லாம் பாடிக்கிட்டு (தள்ளாடி தள்ளாடி)

நீலிமல ஏத்தத்துல நின்னு நின்னு ஏறிக்கிட்டு

நீலிமல ஏத்தத்துல நின்னு நின்னு ஏறிக்கிட்டு

நெஞ்சம் முழுதுமே உந்தன் நினைப்பதுமே மாத்திக்கிட்டு (தள்ளாடி தள்ளாடி)

படியேறி போகும்போது பாங்காகக் காயுடைத்து

பகவான உன்னையே பாத்துப் பாத்து சொக்கிக்கிட்டு

நெய்யிலே குளிப்பதையும் நேரிலே பாத்துவிட்டு

ஐயா சரணம் என்று ஆனந்தமா பாடிக்கிட்டு (தள்ளாடி தள்ளாடி)

சாமியே,.... சரணம் ஐயப்போ………..

சாமியே,...... சரணம் ஐயப்போ ............

சாமியே,...... சரணம் ஐயப்போ ............

சாமி சரணம் ஐயப்ப சரணம்

**Read More @** https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/thalladi-thalladi-nadai-nadanthu-lord-ayyappa-songs/

## அருளும் பொருளும் ஆளும் திறனும் அள்ளித் தருவான் ஐயப்பன்

அருளும் பொருளும் ஆளும் திறனும் அள்ளித் தருவான் ஐயப்பன்.. ஆ…..

ஆடிப்பாடி போற்றும் நெஞ்சில் ஆட்சி செய்வான் ஐயப்பன்

ஆடிப்பாடி போற்றும் நெஞ்சில் ஆட்சி செய்வான் ஐயப்பன்

வெள்ளை மனக் கோவிலிலே விரதமணி தீபத்திலே

வெள்ளை மனக் கோவிலிலே விரதமணி தீபத்திலே

வீரமணிகண்டனையே வேளை எல்லாம் தொழுதவர்க்கு

வீரமணிகண்டனையே வேளை எல்லாம் தொழுதவர்க்கு

அருளும் பொருளும் ஆளும் திறனும் அள்ளித் தருவான் ஐயப்பன்

அகமும் புறமும் புனிதம் கொண்டால் அருகில் வருவான் ஐயப்பன்

அகமும் புறமும் புனிதம் கொண்டால் அருகில் வருவான் ஐயப்பன்

யுகங்கள் தோறும் யோகம் செய்வான் கலியுக வரதன் ஐயப்பன்

யுகங்கள் தோறும் யோகம் செய்வான் கலியுக வரதன் ஐயப்பன்

இருமுடி தாங்கி வந்து ஒருநிலை நின்றவர்க்கு

இருமுடி தாங்கி வந்து ஒருநிலை நின்றவர்க்கு

சரங்குத்தி சாஸ்தாவின் அருள்ஜோதி கண்டவர்க்கு

அருளும் பொருளும் ஆளும் திறனும் அள்ளித் தருவான் ஐயப்பன்

DIVINEINFOGURU.COM

பாலில் நெய்போல் நீரில் குளிர்போல் பதமாய் இருப்பான் ஐயப்பன்

பாலில் நெய்போல் நீரில் குளிர்போல் பதமாய் இருப்பான் ஐயப்பன்

நாலும் கடந்து ஞானம் வந்தால் நற்தனம் புரிவான் ஐயப்பன்

நாலும் கடந்து ஞானம் வந்தால் நற்தனம் புரிவான் ஐயப்பன்

பம்பை நதி தீரத்திலே பாவம் விட்டு வந்தவர்க்கு

பதினெட்டாம் படிதொட்டு பாலன் முகம் பார்த்தவர்க்கு

அருளும் பொருளும் ஆளும் திறனும் அள்ளித் தருவான் ஐயப்பன்

ஆடிப்பாடி போற்றும் நெஞ்சில் ஆட்சி செய்வான் ஐயப்பன்

அருளும் பொருளும் ஆளும் திறனும் அள்ளித் தருவான் ஐயப்பன்

அள்ளித் தருவான் ஐயப்பன்… அள்ளித் தருவான் ஐயப்பன்…… அள்ளித் தருவான் ...... ஐயப்பன்……

**Read More @** https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/arulum-porulum-aalum-thiranum-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## சந்தனம் மணக்குது பன்னீர் மணக்குது சபரிமலை மேலே

சந்தனம் மணக்குது பன்னீர் மணக்குது சபரிமலை மேலே

சந்தனம் மணக்குது பன்னீர் மணக்குது சபரிமலை மேலே

அந்த பந்தளன் மகனுக்கு பாலபிஷேகம் பதினெட்டு படி மேலே

அந்த பந்தளன் மகனுக்கு பாலபிஷேகம் பதினெட்டு படி மேலே

சந்தனம் மணக்குது பன்னீர் மணக்குது சபரிமலை மேலே

சாமி பொன்னையப்பா சரணம் பொன்னையப்பா

சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

சாமி பொன்னையப்பா சரணம் பொன்னையப்பா

சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

சந்தனம் மணக்குது பன்னீர் மணக்குது சபரிமலை மேலே

இள நீராலே அபிஷேகம்தான் குளிருது அவன் மேனி

நல்ல திரு நீரலே அபிஷேகம்தான் சிறுக்குது நம் மேனி

நல்ல திரு நீரலே அபிஷேகம்தான் சிறுக்குது நம் மேனி

சிறுக்குது நம் மேனி

சந்தனம் மணக்குது பன்னீர் மணக்குது சபரிமலை மேலே

அந்த பந்தளன் மகனுக்கு பாலபிஷேகம் பதினெட்டு படி மேலே

சாமி பொன்னையப்பா சரணம் பொன்னையப்பா

சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

சாமி பொன்னையப்பா சரணம் பொன்னையப்பா

சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

DIVINEINFOGURU.COM

சந்தனம் மணக்குது பன்னீர் மணக்குது சபரிமலை மேலே

பக்தர்கள் சுமந்த இருமுடி நெய்யும் உருகி வழியுதைய்யா

பக்தர்கள் சுமந்த இருமுடி நெய்யும் உருகி வழியுதைய்யா

அதை பார்க்கப் பார்க்க ஆனந்தக் கண்ணீர் மழையாய் பொழியுதய்யா

அதை பார்க்கப் பார்க்க ஆனந்தக் கண்ணீர் மழையாய் பொழியுதய்யா

மழையாய் பொழியுதய்யா…

சந்தனம் மணக்குது பன்னீர் மணக்குது சபரிமலை மேலே

சந்தனம் மணக்குது பன்னீர் மணக்குது சபரிமலை மேலே

அந்த பந்தளன் மகனுக்கு பாலபிஷேகம் பதினெட்டு படி மேலே

அந்த பந்தளன் மகனுக்கு பாலபிஷேகம் பதினெட்டு படி மேலே

சந்தனம் மணக்குது பன்னீர் மணக்குது சபரிமலை மேலே

சாமி பொன்னையப்பா சரணம் பொன்னையப்பா

சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

சாமி பொன்னையப்பா சரணம் பொன்னையப்பா

சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

சாமி பொன்னையப்பா சரணம் பொன்னையப்பா

சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

சாமி பொன்னையப்பா சரணம் பொன்னையப்பா

சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

சாமி பொன்னையப்பா சரணம் பொன்னையப்பா

சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

**Read More @** [https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/santhanam-manakuthu-paneer-lord-ayyappa-songs/](https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/santhanam-manakuthu-paneer-lord-ayyappa-songs/)

DIVINEINFOGURU.COM

# போனால் சபரிமலை கேட்டால் சரண கோஷம்

சாமி திங்தக்க தோம் தோம் ஐயப்ப திம்தக்க தோம்

சாமி திங்தக்க தோம் தோம் ஐயப்ப திம்தக்க தோம்

பள்ளிக்கட்டு சபரிமலைக்கு பள்ளிக்கட்டு சபரிமலைக்கு

கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை

கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை

போனால் சபரிமலை கேட்டால் சரண கோஷம்

பார்த்தால் மகர ஜோதி பார்க்க வேண்டும் நான்

பார்த்தால் மகர ஜோதி பார்க்க வேண்டும் (போனால் )

மண்டல காலத்தில் மாலை அணிந்து - சாமி சரணம் ஐயப்ப சரணம்

மணிகண்ட நாமம் தினமும் தினமும் ஜெபித்து - சாமி சரணம் ஐயப்ப சரணம்

இருமுடி தாங்கி எருமேலி சென்று - சாமி சரணம் ஐயப்ப சரணம்

பேட்டையாடி நாங்கள் வருவோம் - சாமி சரணம் ஐயப்ப சரணம் (போனால் )

கெட்டும் எடுத்து காட்டில் நடந்து - சாமி சரணம் ஐயப்ப சரணம்

அழுதா நதியில் கல்லும் எடுத்து - சாமி சரணம் ஐயப்ப சரணம்

கல்லிடும் குன்றில் போட்டு நாங்கள் - சாமி சரணம் ஐயப்ப சரணம்

கரிமலையும் ஏறியே வருவோம் - சாமி சரணம் ஐயப்ப சரணம் (போனால் )

பம்பை நதிக்கரை விரியும் வைத்து - சாமி சரணம் ஐயப்ப சரணம்

பம்பை விளக்கை தொழுது நாங்கள் – சாமி சரணம் ஐயப்ப சரணம்

DIVINEINFOGURU.COM

மகர ஜோதி நாளில் உன்னை – சாமி சரணம் ஐயப்ப சரணம்

கண்டு தொழவே வந்திடுவோம் – சாமி சரணம் ஐயப்ப சரணம்

போனால் சபரிமலை கேட்டால் சரண கோஷம்

பார்த்தால் மகர ஜோதி பார்க்க வேண்டும் நான்

பார்த்தால் மகர ஜோதி பார்க்க வேண்டும்

நான் பார்த்தால் மகர ஜோதி பார்க்க வேண்டும்

நான் பார்த்தால் மகர ஜோதி பார்க்க வேண்டும்

நான் பார்த்தால் மகர ஜோதி பார்க்க வேண்டும்

நான் பார்த்தால் மகர ஜோதி பார்க்க வேண்டும்

**Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/ponal-sabarimala-kettal-lord-ayyappa-songs/**

DIVINEINFOGURU.COM

## இந்த கானக்கருங்குயில் பாட்டு உனக்கு

இந்த கானக்கருங்குயில் பாட்டு உனக்கு உனக்கு

மணிகண்டன் கருண மட்டும் பக்தன் எனக்கு எனக்கு

இந்த கானக்கருங்குயில் பாட்டு உனக்கு உனக்கு

மணிகண்டன் கருண மட்டும் பக்தன் எனக்கு எனக்கு

மாலயிட்ட நாள் முதலா உன்னோட நினப்பு

ஆலையிட்ட செங்கரும்பா என்னோட தவிப்பு

பானகெட்ட கையெனக்கு நான் எடுத்தேன் முறப்பு

தந்தனத்தோம் தாளம் போடுவோம் பேட்ட துள்ளி

திங்கதத்தோம் சொல்லி ஆடுவொம்

நல்ல நெய் தேங்காய் சாமி உனக்கு உனக்கு

ஒரு நோய் தீண்டாத மெய்யு வேணும் எனக்கு

நல்ல நெய் தேங்காய் சாமி உனக்கு உனக்கு

ஒரு நோய் தீண்டாத மெய்யு வேணும் எனக்கு

ஆனைமுகத் தம்பியான ஐயப்பனா உன்னையும்

ஆறுவாரம் மாலையிட்டு நோன்பிருந்த என்னையும்

பாலம்போட்டு கார்த்திகையும் மார்கழியும் இணைக்கும்

தந்தனத்தோம் தாளம் போடுவோம் பேட்ட துள்ளி

திங்கதத்தோம் சொல்லி ஆடுவோம்

DIVINEINFOGURU.COM

கட்டி சூடம் ஊதுவத்தி ஐயா உனக்கு உனக்கு

புனித காந்த மலஜோதி காணும் யோகம் எனக்கு

கட்டி சூடம் ஊதுவத்தி ஐயா உனக்கு உனக்கு

புனித காந்த மலஜோதி காணும் யோகம் எனக்கு

எட்டடுக்கு மாளிகையோ பொன் பொருளோ எதுக்கு

எட்டரோடும் துட்டரோடும் வாழ வேண்டியிருக்கு

காலடியை சேர்ந்துபுட்டா போதுமய்யா எனக்கு

தந்தனத்தோம் தாளம் போடுவோம் பேட்ட துள்ளி

திங்கதத்தோம் சொல்லி ஆடுவோம்

இந்த கானக்கருங்குயில் பாட்டு உனக்கு உனக்கு

மணிகண்டன் கருண மட்டும் பக்தன் எனக்கு எனக்கு

இந்த கானக்கருங்குயில் பாட்டு உனக்கு உனக்கு

மணிகண்டன் கருண மட்டும் பக்தன் எனக்கு எனக்கு

**Read More @** https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/intha-kaana-karunguyile-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

# பந்தளத்து இராஜனுக்கு பாட்டெடுப்போம் வாங்க

பந்தளத்து இராஜனுக்கு பாட்டெடுப்போம் வாங்க

நம் குலத்து தேவனுக்கு நோன்பிருப்போம் வாங்க

சாமி குரு சாமிகிட்ட போட்டுகிட்டோம் மால

(குழு : சத்குரு நாதனே சரணம் ஐயப்போ)

மால மணி மால நல்ல துளசிமணி மால

சாமி குரு சாமிகிட்ட போட்டுகிட்டோம் மால

மால மணி மால நல்ல துளசிமணி மால (2)

வாவர் தோழன வணங்கிட வேண்டியே

பந்தள இராசன பாத்திட வேண்டியே

கால அதிகால நல்ல கார்த்திகையில் நாங்களே

பந்தளத்து இராஜனுக்கு பாட்டெடுப்போம் வாங்க

நம் குலத்து தேவனுக்கு நோன்பிருப்போம் வாங்க (2)

சாமி குரு சாமிகிட்ட போட்டுகிட்டோம் மால

மால மணி மால நல்ல துளசிமணி மால

வெள்ளி முளைக்கும் வேளையில கண் முழிச்சோம் சாமி

வள்ளியோட கொளுந்தனார வணங்கிபுட்டோம் சாமி (2)

வெட வெட குளிரில குளிச்சது தெரியல

நாப்பது நாளுமே நகந்தது தெரியல

போவோம் மல போவோம் ஐயன் ஆண இட்ட நாளிலே

பந்தளத்து இராஜனுக்கு பாட்டெடுப்போம் வாங்க

DIVINEINFOGURU.COM

நம் குலத்து தேவனுக்கு நோன்பிருப்போம் வாங்க (2)

சாமி குரு சாமிகிட்ட போட்டுகிட்டோம் மால

மால மணி மால நல்ல துளசிமணி மால

திம்தகத்தோம் திம்தகத்தோம் திம்தகத்தோம் தோம் தோம்

ஆயுசு காலம் மட்டும் மாமலைக்குப் போவோம்

அம்பலத்தான் பெருமையத்தான் பூமி எங்கும் சேர்ப்போம் (2)

இருமுடி தாங்கியே ஒரு மனதாகியே

திருமல ஏறியே திருவருள் வாங்கவே

போவோம் மல போவோம் ஐயன் ஆண இட்ட நாளிலே

பந்தளத்து இராஜனுக்கு பாட்டெடுப்போம் வாங்க

நம் குலத்து தேவனுக்கு நோன்பிருப்போம் வாங்க (2)

**Read More @** https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/panthalathu-rajanukku-paatedupom-vaanka-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM

## நாற்பது நாட்கள் நோன்பிருந்தேன்

நாற்பது நாட்கள் நோன்பிருந்தேன்

உனை பார்ப்பது பலன் எனப் பணிந்து வந்தேன் (2)

நாள்தோறும் நின்னையே நினைந்திருந்தேன்

நாள்தோறும் நின்னையே நினைந்திருந்தேன்

உன் நாமமே துணை என நடந்து வந்தேன்

உன் நாமமே துணை என நடந்து வந்தேன் (நாற்பது நாட்கள்)

சுவாமியே சரணம் ஐயப்பா நின் சன்னதி

இன்பமே மெய்யப்பா

சுவாமியே சரணம் ஐயப்பா நின் சன்னதி

இன்பமே மெய்யப்பா

காப்பது நின்னடி கமல மலர்

நினைக் காண்பது நல்லக் காலமன்றோ

காப்பது நின்னடி கமல மலர்

நினைக் காண்பது நல்லக் காலமன்றோ

ஏற்பது இன்னருள் பொங்கும் வெள்ளம்

ஏற்பது இன்னருள் பொங்கும் வெள்ளம்

இனி என்றைக்கும் தாழ்வு என் அன்பு உள்ளம்

இனி என்றைக்கும் தாழ்வு என் அன்பு உள்ளம் (நாற்பது நாட்கள்)

சுவாமியே சரணம் ஐயப்பா நின் சன்னதி

மகிமைமே மெய்யப்பா

DIVINEINFOGURU.COM

சுவாமியே சரணம் ஐயப்பா நின் சன்னதி

மகிமையே மெய்யப்பா

சேர்ப்பது இருமுடி தலையினிலே

பின் தரிசனம் சபரிமலையினிலே

சேர்ப்பது இருமுடி தலையினிலே

பின் தரிசனம் சபரிமலையினிலே

கேட்பது சரணம் எனும் குரல்கள்

கேட்பது சரணம் எனும் குரல்கள்

உடன் கிடைப்பது வாழ்வினில் பல நலங்கள்

உடன் கிடைப்பது வாழ்வினில் பல நலங்கள்

நாற்பது நாட்கள் நோன்பிருந்தேன்

உனை பார்ப்பது பலன் எனப் பணிந்து வந்தேன்

நாள்தோறும் நின்னையே நினைந்திருந்தேன்

நாள்தோறும் நின்னையே நினைந்திருந்தேன்

உன் நாமமே துணை என நடந்து வந்தேன்

உன் நாமமே துணை என நடந்து வந்தேன் (நாற்பது நாட்கள்)

சுவாமியே சரணம் ஐயப்பா நின் சன்னதி

இன்பமே மெய்யப்பா

சுவாமியே சரணம் ஐயப்பா நின் சன்னதி

மகிமையே மெய்யப்பா

**Read More @ https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/narpathu-natkal-nonbirunthein-unai-lord-ayyappa-songs/**

DIVINEINFOGURU.COM

## சத்திய ஒளி பரப்பும் சபரிமலை

சத்திய ஒளி பரப்பும் சபரிமலை

சார்ந்தவர் துயர்துடைக்கும் காந்த மலை (2)

அற்புதம் பல நிகழ்த்தும் ஐயன் மலை

அற்புதம் பல நிகழ்த்தும் ஐயன் மலை

அன்புக்கு இடம் கொடுக்கும் அழகு மலை

அன்புக்கு இடம் கொடுக்கும் அழகு மலை

சுவாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா

சொல்லுங்கள் ஐயப்பன் நாமம்

தொலைவில் ஓடுது பாவம்

பம்பை நதியில் குளிப்போம் நம் பந்த பாசம் அழிப்போம்

பந்தள நாடனை நினைப்போம் அவன் சுந்தர மேனியை துதிப்போம்

சுவாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா

சொல்லுங்கள் ஐயப்பன் நாமம்

தொலைவில் ஓடுது பாவம்

வெட்டுப் பாறையில் நடப்போம்

பதினெட்டுப் படிகள் கடப்போம்

வெட்டுப் பாறையில் நடப்போம்

பதினெட்டுப் படிகள் கடப்போம்

பக்திபழரசம் குடிப்போம்

DIVINEINFOGURU.COM

ஐயன் பாதங்களில் பற்றிப் பிடிப்போம்

சத்திய ஒளி பரப்பும் சபரிமலை

சார்ந்தவர் துயர்துடைக்கும் காந்த மலை (2)

அற்புதம் பல நிகழ்த்தும் ஐயன் மலை

அற்புதம் பல நிகழ்த்தும் ஐயன் மலை

அன்புக்கு இடம் கொடுக்கும் அழகு மலை

அன்புக்கு இடம் கொடுக்கும் அழகு மலை

சுவாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா

சொல்லுங்கள் ஐயப்பன் நாமம்

தொலைவில் ஓடுது பாவம்

சுவாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா

சுவாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா…..

**Read More @ [https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/sathiya-oli-parapum-sabarimalai-lord-ayyappa-songs/](https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/sathiya-oli-parapum-sabarimalai-lord-ayyappa-songs/)**

DIVINEINFOGURU.COM

## பவனி வர்றார் இங்கே சாமி சரணம் ஐயப்பா

பவனி வர்றார் இங்கே சாமி சரணம் ஐயப்பா

வாவர் சாமி கூட வர்றார் சாமி ஐயப்பா

பவனி வர்றார் இங்கே சாமி சரணம் ஐயப்பா

வாவர் சுவாமி கூட வர்றார் சாமி ஐயப்பா

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா (பவனி வர்றார் இங்கே)

காவலர்கள் கூட வர்றார் சரணம் ஐயப்பா

ஆவலோடு கும்பிடுவோம் சரணம் ஐயப்பா

காவலர்கள் கூட வர்றார் சரணம் ஐயப்பா

ஆவலோடு கும்பிடுவோம் சரணம் ஐயப்பா

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

அம்பு வில்லும் கையிலேந்தி சுவாமி வருகிறார்

எம்பெருமான் துள்ளி துள்ளி ஆடி வருகிறர்

துன்பமெல்லாம் தீர்த்திடவே பவனி வருகிறார்

இன்பமோடு கும்பிடுவோம் சரணம் ஐயப்பா (பவனி வர்றார் இங்கே)

DIVINEINFOGURU.COM

தந்தை தாயுமான சுவாமி பவனி வருகிறார்

வேதியர் சபை நடுவே சுவாமி வருகிறார்

பூதப்படைகளுடன் ஐயன் வருகிறார்

இத்தருணம் காத்திடுவார் சரணம் ஐயப்பா (பவனி வர்றார் இங்கே)

கடகடவென பீறி முழங்க சுவாமி வருகிறார்

கொட்டு வாத்தியம் முழங்கி வரவே ஐயன் வருகிறார்

கடகடவென பீறி முழங்க சுவாமி வருகிறார்

கொட்டு வாத்தியம் முழங்கி வரவே ஐயன் வருகிறார்

மாடன் சடையன் பொருளன் இருளன் சரணம் ஐயப்பா

ஓடி வரவே பவனி வர்றார் சரணம் ஐயப்பா

மாடன் சடையன் பொருளன் இருளன் சரணம் ஐயப்பா

ஓடி வரவே பவனி வர்றார் சரணம் ஐயப்பா (பவனி வர்றார் இங்கே)

மின்னல் போல ஒளி விளங்க சரணம் ஐயப்பா

பொன்னு மேனி கண்டிடவே சரணம் ஐயப்பா

மின்னல் போல ஒளி விளங்க சரணம் ஐயப்பா

பொன்னு மேனி கண்டிடவே சரணம் ஐயப்பா

தனிச் சிலம்பு சல்லடையும் சுவாமி ஐயப்பா

கலகலவென சலங்கை குலுங்க பவனி வருகிறார் (பவனி வர்றார் இங்கே)

கடும் பிணியின் கொடுமையினால் வருந்தும் பக்தரை

நொடிப்பொழுதில் பிணி அகற்றி காத்தருள் ஐயா

கடும் பிணியின் கொடுமையினால் வருந்தும் பக்தரை

DIVINEINFOGURU.COM

நொடிப்பொழுதில் பிணி அகற்றி காத்தருள் ஐயா

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

ஹரிஹர சுதன் அகில வரதன் அபயம் ஐயப்பா

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

ஹரிஹர சுதன் அகில வரதன் அபயம் ஐயப்பா

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

ஹரிஹர சுதன் அகில வரதன் அபயம் ஐயப்பா

**Read More @ [https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/bhavani-varaar-inge-swami-lord-ayyappa-songs/](https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/bhavani-varaar-inge-swami-lord-ayyappa-songs/)**

DIVINEINFOGURU.COM

## வன்புலி மேல் ஏறிவரும் எங்கள் வீரமணிகண்டனே வா

வன்புலி மேல் ஏறிவரும் எங்கள்

வீரமணிகண்டனே வா உந்தன்

வீரவிளையாடல்களைப் பாட வாணி

தடை போடவில்லை!

கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் மொழி

பிஞ்சுமுகம் பார்க்கலையே ஐயப்பா அந்த

பந்தளத்தான் செய்த தவம்

இந்த பாமரன்யான் செய்யவில்லையோ!

அம்பும் வில்லும் கையில் எதற்கோ அந்த

வாபரனை வெற்றி கொள்ளவோ ஐயப்பா

உந்தன் பக்தர்களின் குறைகளெல்லாம்

நீயும் வேட்டையாடி விரட்டிடவோ!

பாலெடுக்க புலி எதற்கோ உந்தன்

பார்வைதான் சக்தியற்றதோ ஐயப்பா

உந்தன் பார்வை ஒன்று போதுமய்யா

அருள் பால்பொழிய வேண்டுமய்யா!

கற்பூரப் பிரியனின் பார்வை எங்களை ஒரு

காந்தம் போல் இழுக்குதய்யா ஐயப்பா

கதிரேசன் தம்பியே கண்கண்ட தெய்வமே கதாதரன் மகனே உன்னைக் காண அருள் செய்வாய் ஐயப்பா!

**Read More @** https://divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/vanpuli-mel-yerivarum-engal-veera-lord-ayyappa-songs/

DIVINEINFOGURU.COM